

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 21-09-2025

# அமித்ஷாவைச் சந்திப்பது அவ்வளவு அவமானமா?

சில மாதங்களுக்கு முன்னால் உள்துறை அமைச்சர் அமித்ஷாவைச் சந்திக்க எடப்பாடி பழனிசாமி டெல்லிக்குப் போனார். பல கார்கள் மாறி மாறிப் போனார். தலைமறைவாகப் போனார். ஒரு இடத்தில் மடக்கி, 'அமித்ஷாவைச் சந்திப்பீர்களா?' என்று நிருபர்கள் கேட்டார்கள். 'ஏங்க நான் எதுக்காக வந்திருக்கேன்னே தெரியாம உங்க இஷ்டத்துக்கு கேட்கிறீங்க... என் கட்சி ஆபீஸைப் பார்க்க வந்திருக்கேன்ங்க..' என்றார் பழனிசாமி. இதைச் சொன்ன சில நிமிடங்களிலேயே உள்துறை அமைச்சர் அமித்ஷாவை அவர் சந்தித்தார். 'எங்க கட்சி ஆபீஸ்' என்று பழனிசாமி சொல்வது, அமித்ஷாவைத்தான் போலும்!

இரண்டு நாட்களுக்கு முன்னால் உள்துறை அமைச்சர் அமித்ஷாவைச் சந்தித்துவிட்டு எடப்பாடி பழனிசாமி வரும் போது, மீடியாக்கள் கண்களில் இருந்து தன்னை மறைத்துக் கொள்ளும் வகையில் துணியை வைத்து தனது முகத்தை மூடிக் கொண்டார். கேட்டால், 'முகத்தைத் துடைத்தேன்' என்கிறார். அவர் போன கார் யாருடையது, அவரோடு இருந்தவர்கள் யார் என்று கேட்டால் கோபம் வருகிறது பழனிசாமிக்கு. 'நீங்க யார் கூட வந்தீங்க? யார் கூட போனீங்கன்னு நான் கேட்க முடியுமா?' என்று நிருபர்களைப் பார்த்தே பழனிசாமி கேட்கிறார். 'எனக்கு கார் இல்லீங்க, கிடைச்ச காரில் போனேன்' என்கிறார். ஐயோ பாவம், லிப்ட் கேட்டு போகும் நிலைமையில்தான் அவரது கட்சி அவரை வைத்திருக்கிறது போலும்!

**உள்துறை அமைச்சர் அமித்ஷாவை, சந்திக்கப் போவதாக அறிவித்துவிட்டுப் போகலாம். தவறு இல்லை. அவர் இந்த நாட்டிம் உள்துறை அமைச்சர். அவரைப் போய் பார்ப்பதை மறைப்பதன் மூலமாக, அமித்ஷாவைச் சந்திப்பதை அவமானகரமான செயலாக பழனிசாமி நினைக்கிறாரா?**

பா.ஜ.க. கூட்டணியில் அ.தி.மு.க. இருக்கிறது. கூட்டணிக் கட்சித் தலைவர் என்ற முறையில் அமித்ஷாவை பழனிசாமி எப்போதும் சந்திக்கலாம். அமித்ஷா வீட்டிலேயே பழனிசாமி தங்கலாம். கார் ஷெட்டில் குடியிருக்கலாம். ஏனென்றால் பழனிசாமிக்கு, டெல்லியில் வீடு இருக்காது. அதனால் அங்கேயே தங்கலாம். தப்பில்லை. அமித்ஷாவும் மறுக்க மாட்டார். கடந்த தேர்தலில் பா.ஜ.க. வென்ற நாலு இடங்களை இம்முறை வெல்ல பா.ஜ.க.வுக்கு பழனிசாமி தேவை.

'எங்கள் ஆட்சியைக் காப்பாற்றியதே பா.ஜ.க. தான்' என்கிறார் பழனிசாமி. அதற்குப் பரிகாரமாக பா.ஜ.க.வுடன் கூட்டணி வைத்துக் கொள்ளலாம். பா.ஜ.க.விடம் அ.தி.மு.க.வை அடமானம் வைக்கலாம். எதையும் செய்யலாம். அவரைக் குறை சொல்லவில்லை. குறைகாண வில்லை. ஆனால், அதனை வெளிப்படையாகச் செய்யுங்கள். இதில் மறைக்க என்ன இருக்கிறது? முழுக்க நனைந்த பிறகு முக்காடு எதற்கு?

**எதற்காக இத்தனை கீழ்த்தரமான நாடகங்கள்? யாரை ஏமாற்றுவதற்கு இத்தனை இழிசெயல்கள்? 'எனக்கு கார் இல்லை', 'எனக்கு டிரஸ்ட் இல்லை' என்ற கழிவிரக்கம் யாரிடம் தேடுகிறார் பழனிசாமி. 'நான் விவசாயி என்பதால் இந்த மாதிரி எல்லாம் கேள்வி கேட்கிறீர்கள்?' என்று நொந்தவரைப் போல புலம்புகிறார் பழனிசாமி. அவர் மகா நடிகன் என்பதால்தான் இத்தகைய கேள்விகளை எதிர்கொள்கிறார். 'விவசாயி' என்பதற்காக அல்ல? எந்த விவசாயியும் இத்தகைய இழிவான நாடகங்களை நித்தமும் நடத்த மாட்டார்கள்.**

அ.தி.மு.க.வில் இருந்து பழனிசாமியைத் தனிமைப்படுத்தி விட்டது பா.ஜ.க.. அவரைச் சுற்றிலும் உள்ளவர்கள் அனைவரையும் வளைத்துவிட்டது பா.ஜ.க. செங்கோட்டையனுக்கு 'ஆக்ஸிஜன்' அமித்ஷா வீட்டில் இருந்துதான் வருகிறது. 'ஹரித்வார்' போவதாக வந்த செங்கோட்டையனை அமித்ஷா வீட்டுக்கு கடத்தி விட்ட காட்சியையும்தான் சில நாட்களுக்கு முன்னால் பார்த்தோம். அ.தி.மு.க.வில் எவருக்கும், செய்வதைச் சொல்லும் துணிச்சல் துளியும் இல்லை. ஏனென்றால் செய்வது அனைத்தும் கேவலமானவை. அதனால்தான் இத்தகைய பொய்யும், பித்தலாட்டமும்.

வெறும் பழனிசாமியை மட்டும் வைத்துக் கொண்டால் பருப்பு வேகாது என்பது பா.ஜ.க.வுக்குத் தெரிந்துவிட்டது. அதனால், "விலகியவர்களையும் சேர்த்துக் கொள்ளுங்கள்" என்று கட்டளையிடுகிறது பா.ஜ.க. சசிகலாவை மீண்டும் சேர்த்தால், தனக்கு உட்கார சேர்கூட கிடைக்காது என்பது பழனிசாமிக்குத் தெரியும். சசிகலா காலைப் பார்த்து மண்புழுவைப் போல ஊர்ந்து போய் முதலமைச்சர் ஆனவர் பழனிசாமி.

'என் பெயரை முன்கூட்டியே சொல்ல வேண்டாம். சொன்னால் பலரும் என்னை ஏற்க மாட்டார்கள்' என்று கூவத்தூர் பட்டாபிஷேகத்துக்கு முன்னால் தன்னிடம் பழனிசாமி கெஞ்சியதாக டி.டி.வி. தினகரன் போட்டு உடைத்துவிட்டார். இத்தகைய பழனிசாமி, டி.டி.வி. தினகரனை எப்படி முகத்துக்கு நேராகப் பார்ப்பார்?

ஓ.பன்னீர் செல்வம், ஏற்கனவே பழனிசாமி தலையில் ஓங்கித் தட்டியவர். செங்கோட்டையன், புதிய கத்தியைத் தீட்டி வருகிறார். தன்னோடு சேர்ந்து ஆறு முன்னாள் அமைச்சர்கள், பழனிசாமியின் தவறான முடிவுகளைக் கண்டித்ததாக செங்கோட்டையன் சொல்லி வருகிறார். அந்த ஆறு பேரும் இதுவரை அதை மறுக்கவில்லை. அப்படியானால் பழனிசாமி, பங்களா வீட்டில் யாருமே இல்லாமல் தனிமையில் இருக்கிறார் என்றுதானே பொருள்?

இப்படி அவரைச் சுற்றி வளைத்துவிட்டது பா.ஜ.க. 'சாட்சிக்காரன் காலில் விழுவதை விட சண்டைக்காரன் காலில் விழலாம்' என்பார்கள். ஆனால் பழனிசாமி, 'சண்டைக்காரன் காலில் விழுவதை விட சாட்சிக்காரன் காலில் விழலாம்' என்று நினைக்கிறார். அதனால்தான் தலைநகரில் தலையில் முக்காடு போட்டுத் திரிகிறார்.

**சிலர் ஆசைக்கும்**
**தேவைக்கும்**
**வாழ்வுக்கும் வசதிக்கும்**
**ஊரார் கால் பிடிப்பார்.**
**ஒரு மானமில்லை**
**அதில் ஈனமில்லை**
**அவர்**
**எப்போதும்**
**வால் பிடிப்பார்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.9.2025) செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவில் புதிதாக நிறுவப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீரமங்கை இராணி வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறந்து வைத்து, அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள அவரது திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் எ.வ.வேலு, எஸ்.இரகுபதி, கே.ஆர்.பெரியகருப்பன், மு.பெ.சாமிநாதன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, முனைவர் டி.ஆர்.பி.ராஜா, மேயர் திருமதி ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர்கள் பிரபாகரராஜா, அரவிந்த் ரமேஷ், க.கணபதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், முன்னாள் அமைச்சர் அன்வர் ராஜா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## சென்னை — கிண்டி காந்தி மண்டப வளாகத்தில்

# வீரமங்கை இராணி வேலுநாச்சியார் திருவுருவச் சிலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, செப். 21 -**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீராங்கனை வீர மங்கை வேலுநாச்சியார் அவர்களின் திருவுருவச் சிலையினைத் தமிழ்நாடு அரசின் சார்பில் கிண்டி காந்தி மண்டப வளாகத்தில் புதிதாக நிறுவி நேற்று முன்தினம் திறந்து வைத்துள்ளார்.**

வீர மங்கை வேலுநாச்சியார் அவர்கள், இந்திய திருநாட்டின் சுதந்திரப் போர் வரலாற்றில் வடபுல வீராங்கனை ஜான்சிராணி காலத்திற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே சிவகங்கை மண்ணில் ஆதிக்கம் செலுத்த முனைந்த வெள்ளையர்களை விரட்டித் துவம்சம் செய்து, மீண்டும் சிவகங்கையில் ஆட்சியை நிறுவிய மாபெரும் வெற்றி மங்கை. அவர் தமிழ் மொழியுடன் ஆங்கிலம், உருது, தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளையும் நன்கு அறிந்தவர்.

வீர மங்கை வேலுநாச்சியார் வாழ்க்கையில் நடைபெற்றதாகக் கூறப்படும் ஒரு நிகழ்வில் ஆங்கிலேயரை அவர் எதிர்த்த வீரம் கொப்பளிக்கிறது. அதாவது ;

சிவகங்கை அரண்மனையின் ஆலோசனை கூடத்தில், கால் மேல் கால் போட்டு, கம்பீரமாய், கர்வமும், ஆணவமும் நிரம்பி வழியும், முகத்துடன் அமர்ந்திருக்கின்றான் கவர்னர் லாட்டீ காட்.

சிறிது நேரத்தில் சிவகங்கை மன்னர் முத்து வடுகநாதர் உள்ளே நுழைகிறார்.

நாற்காலியில் மேலும் பின்னோக்கி சாய்ந்து, இடது காலின் மேல், இருக்கும் வலது காலினை ஆட்டியபடியே, அதிகாரத் தோரணையில் பேசுகிறான் கவர்னர் லாட் டீ.

"மிஸ்டர் முத்து வடுகநாதர், நீர் எமக்குக் கொடுக்க வேண்டிய வரியை, வெகு காலமாக கட்டவில்லை. ஏன்? விளக்கம் தேவை?

மன்னருக்கு ஆங்கிலம் தெரியாது,

கவர்னருக்கோ தமிழ் தெரியாது.

கவர்னருடன் வந்த மொழிபெயர்ப்பாளனோ, கைகட்டி, வாய் பொத்தி ஓரமாய், அமைதியாய் நிற்கிறான்.

மன்னரின் குழப்பத்தைக் கண்டும், தனது பேச்சினை புரிந்து கொள்ள முடியாத, இயலாமையைக் கண்டும், கவர்னரின் கண்களில் ஒரு எகத்தாளச் சிரிப்பு. ஆங்கிலம் தெரியாதா உனக்கு? என்னும் ஒரு கேலிப் பார்வை.

அறையின் வெளியில் இருந்து, இவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த வீர மங்கை வேலு நாச்சியார், அறைக்குள் புயலெனப் புகுந்தார். ஆங்கிலத்தில்,

"எங்களை அண்டிப் பிழைக்க வந்த நீங்கள்தான், எங்களின் தாய் மொழியைத் தெரிந்து கொள்ள வேண்டுமே தவிர, நாங்கள் உங்கள் மொழியைத் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை

ஒரு நிமிடம்தான், ஒரே நிமிடம், வாரி சுருட்டிக் கொண்டு, தன்னையும் அறியாமல் எழுந்து நிற்கிறான் லாட் டீ.

யார் இவள்? என் மொழியில், ஆங்கிலத்தில், வீர முழக்கமிடு கிறாரே யார் இவள்? புரியவில்லை அவனுக்கு.

உனக்கு ஆங்கிலம் மட்டும்தானே தெரியும்? இதோ, இப்பொழுது நான் பேசியதை, தெலுங்கில் சொல்கிறேன் கேள்.

கவர்னர் விழித்தான்.

இதோ, மலையாளத்தில் சொல்கிறேன் கேள்.

கவர்னரின் விழிகள் வியப்பால் விரிந்தன.

இதோ கன்னடத்தில் கூறுகிறேன் கேள்.

லாட் டீ தவிக்கத் தொடங்கினான்.

இதோ உருதுவில் கூறுகிறேன் கேள்.

அறையை விட்டு வெளியே ஓடிவிடலாமா? என்ற எண்ணம் லாட் டீயின் மனதில் நுழைந்தது.

ஒரு பெண்மணிக்குள், இத்தனை மொழிகள் அடைக்கலமா?

கம்பீரமாக அமர்ந்திருந்த கவர்னர், இப்பொழுது கைகட்டி நிற்கின்றான்.

இது எங்கள் மண். எங்கள் நாடு. எங்கள் மக்கள். இங்கிருக்கும் ஒவ்வொரு துரும்பும், ஒவ்வொரு அணுவும், எங்களின் உழைப்பைச் சொல்லும்.

எங்கள் மக்களின் உழைப்பாலும், உதிரத்தாலும், வியர்வையாலும் உருவானது எங்கள் நாடு.

இங்கே ஓடுகின்ற நதிகளும், நிற்கின்ற மரங்களும், வீசுகின்ற காற்றும், அடிக்கின்ற வெயிலும், பெய்கின்ற மழையும் எங்கள் மண்ணின் பெருமையைச் சொல்லும்.

அன்புக்கு எங்கள் தலை என்றும் குனியும், ஆணவத்தோடு நெருங்கினால், தலை மண்ணில் உருளும்.

எங்கிருந்தோ பிழைக்க வந்த நீ, எங்களிடமே வரி கேட்கின்றாயா? வரி கொடுத்து எமக்குப் பழக்கமில்லை.

உதவி என்று கேள், வாரி வாரி வழங்குகின்றேன். இனியொரு முறை, வரி என்று கேட்டால், வரி கேட்டு வருபவனுக்கு வாயே இருக்காது.

வேலு நாச்சியார் ஆங்கிலத்தில் முழங்கி முடித்த பின்பும், வெகுநேரம், கவர்னரின் காதுகளில், வார்த்தைகள் எதிரொலித்துக் கொண்டே இருந்தன.

இனியும் இங்கே நின்றால், உயிரும் மிஞ்சாது என்பதை அறிந்த கவர்னர், வேகமாய் அரண்மனையை விட்டு வெளியேறினான்.

வெள்ளைய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடி,

வென்ற வீரத் தமிழச்சி வேலு நாச்சியார்!

இந்த மாவீரப் பெண்மணி வேலுநாச்சியாரின் வீரம் போற்றி சிவகங்கை மண்ணில் வேலுநாச்சியார் மணிமண்டபம் அமைக்கப் பட்டுள்ளது. அந்த மணிமண்டபத்தில் இந்திய திருநாட்டில் 75 ஆவது சுதந்திர திருவிழாவையொட்டி, ஒளிஒலிக் காட்சி அமைப்பு நிறுவப் பட்டு பார்வையாளர்களுக்கு களிப்பூட்டி வருகிறது. ஆண்டுதோறும், வீரமங்கை வேலு நாச்சியார் அவர்களின் பிறந்த நாளில் அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், இந்திய சுதந்திரப் போரின் முதல் தமிழ் வீரப் பெண்மணி வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களின் தியாக வாழ்வை நினைவுறுத்தும் வண்ணம் தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை மாநகரில் கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் 50 இலட்ச ரூபாய்ச் செலவில் நிறுவி, நேற்று முன்தினம் (19.09.2025) தம் திருக்கரங்களால் திறந்து வைத்து மலர்கள் தூவி மரியாதை செலுத்தியுள்ளார்கள்.

இந்த வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த நிகழ்ச்சியின் வாயிலாக முதலமைச்சர் அவர்கள் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு செலுத்தி வரும் சிறப்புகளைப் போற்றி சிவகங்கை மன்னர் குடும்ப வாரிசாகத் திகழும் மேதகு ராணி DSK.மதுராந்தகி நாச்சியார் அவர்கள், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு, நேற்று முன்தினம் (19.9.2025) நன்றி தெரிவித்து வாழ்த்து மடல் ஒன்று அனுப்பியுள்ளார்.

## 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் மனநிறைவு:

# நாடாளுமன்ற - சட்டமன்ற - உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் முகாம்களை ஆய்வு செய்து மக்களின் தேவைகளைத் தீர்ப்பீர்!

## வலைதளப் பதிவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்!

சென்னை, செப்.21-

சென்னை, தியாகராயர் நகரில் நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" முகாமிற்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**பல்வேறு அரசுத் துறை சார்ந்த கோரிக்கைகளுக்கும் ஒரே இடத்தில் தீர்வுகாண முடிவதாக, தியாகராயர் நகர் முகாமில் மக்கள் வெளிப்படுத்திய மனநிறைவே சொல்கிறது உங்களுடன் ஸ்டாலின் முகாம்களின் வெற்றியை!**

**நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் என அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் தத்தமது பகுதிகளில் நடைபெறும் முகாம்களை ஆய்வுசெய்து, மக்களின் தேவைகளைத் தீர்த்துவைக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட வேண்டும்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (19.9.2025) தலைமைச் செயலகத்தில், வில்வித்தை வீராங்கனை கே. எஸ். வெனிசா ஸ்ரீ அவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வாங்குவதற்காக 4,10,740 ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்பட விளையாட்டு வீரர், வீராங்கனைகள், அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.